## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன்– அரசு பணியிடங்களில் மாற்றுத் திறனாளிகளக்கு 3 சதவிதம் பணியிடங்கள் உகந்த பணியிடங்களாக கண்டறியப்பட்டுள்ள பணியிடங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் இருந்தால் அப்பணியிடங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடமாக ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.05

நாள்: 29–01–2013
நந்தன, தை 16,
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.602, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 14–08–1981.
2. அரசாணை(நிலை) எண்.99, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 29–02–1988.
3. அரசாணை(நிலை) எண். 53, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்11–04–2005.

மீண்டும் படிக்க:

4. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் நேர்முக கடிதம் எண்.5910/மா.தி.ந.3.1/2010, நாள் 23.8.2012.

---

**ஆணை:**

மேலே ஒன்றில்படிக்கப்பட்ட அரசாணையில், அரசுப் பணிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழங்கள் ஆகியவற்றில் 3% இட ஒதுக்கீடு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் தொகுதி ‘சி’ மற்றும் ‘டி’ பணியிடங்கள் அனைத்தும் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களாக கண்டறியப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. அரசாணை(நிலை) எண்.53, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 11–04–2005ல் தொகுதி A மற்றும் தொகுதி B ஆகிய பணியிடங்களில் 117 பணியிடங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களாக கண்டறியப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதத்தில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் மணிகுமார் அவர்களின் உத்தரவில் ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், சமஉரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம் 1995–ன்படி அனைத்து அரசு துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் மாற்றுத் திறனாளிகளுக்கான பணியிடங்களை கண்டறிந்து அரசு ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு வேலை வாய்ப்பில் 3% இட ஒதுக்கீடு வழங்குவதை உறுதிபடுத்தி 1996 முதல் மாற்றுத்

திறனாளிகளுக்கான பின்னடைவு பணியிடங்களை ஏ, பி, சி மற்றும் டி ஆகிய பணியாளர் பிரிவுகளில் கண்டறிய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், கண்டறியப்பட்ட பின்னடைவு பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்காக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக மாற்றுத் திறனாளிகளை தேர்வு செய்வதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும், மேலும் அரசு துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், பல்கலை கழகங்கள், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றால் கண்டறியப்பட்டு பின்னடைவு பணியிடங்களை தமது இணைய தளத்தில் வெளியிட்டு மாற்றுத் திறனாளிகளுக்கான பின்னடைவு பணியிடங்களை நிரப்பிட வேண்டும் என்றும், அனைத்து அரசு துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், பல்கலை கழகங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகள் விவரங்களை தொகுத்து ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைத்திட வேண்டும் எனவும், வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம் 1995, ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) விதிகள் 2002, விதி 32(a)ல் அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் மாற்றுத் திறனாளிகளுக்குரிய பணியிடங்களை கண்டறிந்து மாற்றுத் திறனாளிகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் தொழில் நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றுத் திறனாளிகளுக்குரிய பணியடங்களை மறு ஆய்வு செய்து, இட ஒதுக்கீடு செய்து நடைமுறைப்படுத்த வேண்டும் என மேற்படி விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேலும், மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அமலாக்கத் துறை, மத்திய அரசு அறிவிக்கை எண்.75, நாள் 15.03.2007ல் மத்திய அரசின் அரசு துறைகளில் 'ஏ' , 'பி', 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியிடங்களில் அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் கை, கால் பாதிக்கப்பட்ட செவித் திறன் குறையுடைய மற்றும் பார்வையற்ற மற்றும் பார்வை திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகள் பணி செய்யக்கூடிய பணியிடங்களை கண்டறிந்து ஆணை வெளியிட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்காணும் பொருள் குறித்து உரிய ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலித்த பின்னர் அதனை ஏற்று, அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.

i. அரசால் மாற்றுத் திறனாளிகளுக்கு தொகுதி A மற்றும் B பணியிடங்களில் உகந்த பணியிடங்களாக கண்டறியப்பட்டு ஆணை வெளியிடப்படும் அனைத்து பணியிடங்களும் அரசு சார்பு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் அப்பணியிடங்கள் இருந்தால் அப்பணியிடங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களாக கண்டறிந்து அந்தந்த நிறுவனங்கள் தங்களது இணையதளத்தில் வெளியிட்டு மாற்றுத் திறனாளிகளுக்கான 3% பணியிடங்கள் நிரப்ப வேண்டும்.

ii. தொகுதி 'சி' மற்றும் தொகுதி 'டி' பணியிடங்களைப் பொருத்தவரை அனைத்துப் பணிடங்களும் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களாக ஏற்கனவே அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால். அரசு சார்பு நிறுவனங்கள் ...

வாரியங்கள், பல்கலைக்கழகங்களில் உள்ள அனைத்து 'சி' மற்றும் 'டி' பணியிடங்கள் குறித்து இணையதளத்தில் அறிவிப்பு வெளியிட்டு பின்னடைவு பணியிடங்கள் ஏதுமிருப்பின் மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு 3% பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

iii. தொகுதி A, B, C மற்றும் D ஆகிய பணியாளர் தொகுதியில் ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) விதிகள் 2002 பிறப்பிக்கப்பட்டதற்கு பின்னர் ஏற்பட்ட 3% பின்னடைவு பணியிடங்கள் 2002 முதல் உடனடியாக கண்டறிந்து அப்பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்/ ஆசிரியர் தேர்வு வாரியம்/ மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகளை தேர்வு செய்வதற்கு ஆணைகள் பிறப்பிக்க வேண்டும். பின்னடைவு பணியிடங்களை கண்டறிந்து மாற்றுத் திறனாளிகளை தேர்வு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்ட விவரத்தை உடன் அரசுக்கு தெரிவித்து இதனை அந்தந்த நிறுவனங்களின் இணையதளத்தில் வெளியிட வேண்டும். மேலும் ஊனமுற்றோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காலி பணியிடங்களுக்கு தகுதியான ஊனமுற்ற நபர் கிடைக்காதபட்சத்தில் அந்த நிரப்பப்படாத காலிப் பணியிடங்களை மத்திய அரசு கடைப்பிடிப்பது போன்று அடுத்தடுத்த மூன்று ஆண்டுகள் வரை முன்கொணர வேண்டும்.

iv. மேற்காணும் பணியிடங்களை அனைத்து அரசு சார்பு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவை இதனை நடைமுறைப்படுத்த அந்தந்தத் துறை செயலாளர் தலைமையில் ஒரு குழுவினை அமைத்திடல் வேண்டும். இக்குழு ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒருமுறை கூடி ஊனமுற்றோருக்கு வேலை வழங்கிய விவரத்தை ஆய்வு செய்திட வேண்டும்.

7. இவ்வாணை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.999/கே/ப.(ம)நி.சீ/2013–01, நாள்28.01.13ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–9.
அனைத்து துறைத் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து பல்கலைக்கழகங்கள்.
தமிழ்நாடு அரசு தேர்வு வாரியம், சென்னை–8.
ஆணையர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு , கிண்டி, சென்னை–32.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
25/1/13